இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 11-06-2023

# பாரதியார் பாடல்களைப் படிக்கவும்!

★ மாநிலங்களுக்கு தனிப்பட்ட எந்தப் பண்பாடும் இல்லை என்று சொல்லும் ஆளுநர் அவர்கள், பாரதியாரின் இந்தப் பாடலைப் படிக்கவும்!

முப்பது கோடி முகமுடையாள் - உயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள் - இவள்
செப்புமொழி பதினெட்டுடையாள் - எனில்
சிந்தனை ஒன்றுடையாள்.

★ மாநிலங்களுக்குத் தனிப்பட்ட எந்தப் பண்பாடும் இல்லை என்று சொல்லும் ஆளுநர் அவர்கள், பாரதியாரின் இந்தப் பாடலைப் படிக்கவும்!

**சிந்து நதியின் மிசை நிலவினிலே**
**சேரநன்னாட்டிளம் பெண்களுடனே**
**சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து**
**தோணிகளோட்டி விளையாடி வருவோம்!**

**கங்கை நதிப் புறத்து கோதுமைப் பண்டம்**
**காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்வோம்**
**சிங்க மராட்டியர் தம் கவிதை கொண்டு**
**சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்!**

★ மாநிலங்களுக்கு தனிப்பட்ட எந்தப் பண்பாடும் இல்லை என்று சொல்லும் ஆளுநர் அவர்கள், பாரதியாரின் இந்தப் பாடலைப் படிக்கவும்!

செந்தமிழ் நாட்டுப் பொருநர் - கொடுந்
தீக்கண் மறவர்கள், சேரன் தன் வீரர்
சிந்தை துணிந்த தெலுங்கர் - தாயின்
சேவடிக் கேபணி செய்திடு துளுவர்

கன்னடர் ஒட்டிய ரோடு - போரில்
காலனும் அஞ்சக் கலங்கும் மராட்டர்
பொன்னகர்த் தேவர்க ளொப்ப - நிற்கும்
பொற்புடை யார் இந்துஸ்தானத்து மல்லர்

**★ மாநிலங்களுக்கு தனிப்பட்ட எந்தப் பண்பாடும் இல்லை என்று சொல்லும் ஆளுநர் அவர்கள், பாரதியாரின் இந்தப் பாடலைப் படிக்கவும்!**

**யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்**
**இனிதாவ தெங்கும் காணோம்**
**தேமதுரத் தமிழோசை உலகமெலாம்**
**பரவும்வகை செய்தல் வேண்டும்.**

யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர் போல், இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை, வெறும் புகழ்ச்சி யில்லை!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!

★ மாநிலங்களுக்கு தனிப்பட்ட எந்தப் பண்பாடும் இல்லை என்று சொல்லும் ஆளுநர் அவர்கள், பாரதியாரின் இந்தப் பாடலைப் படிக்கவும்!

செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே - எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே

காவிரி தென்பெண்ணை பாலாறு - தமிழ்
கண்டதோர் வையை பொருனை நதி - என
மேவிய யாறு பலவோடத் - திரு
மேனி செழித்த தமிழ்நாடு

நீலத் திரைக்கட லோரத்திலே - நின்று
நித்தம் தவஞ்செய் குமரிஎல்லை - வட
மாலவன் குன்றம் இவற்றிடையே - புகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ்நாடு

**வள்ளுவன் தன்னை உலகினுக்கே - தந்து**
**வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - நெஞ்சை**
**அள்ளும் சிலப்பதி காரமென்றோர் - மணி**
**யாரம் படைத்த தமிழ்நாடு**

**சீன மிசிரம் யவனரகம் - இன்னும்**
**தேசம் பலவும் புகழ்வீசிக் - கலை**
**ஞானம் படைத் தொழில் வாணிபமும் - மிக**
**நன்று வளர்த்த தமிழ்நாடு**

மாநிலங்களுக்கு தனிப்பட்ட எந்தப் பண்பாடும் இல்லை என்று சொல்லும் ஆளுநர் அவர்கள், பாரதியாரின் இந்தப் பாடலைப் படிக்கவும்!





டெல்டா மாவட்டங்களில் ஆய்வு மேற்கொள்ள சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தஞ்சையில் பொதுமக்கள், 100 நாள் வேலை திட்ட மகளிர் பணியாளர்கள் திரண்டு நின்று உற்சாக வரவேற்பு அளித்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.6.2023) தஞ்சாவூர் சுற்றுலா மாளிகையில் இவ்வாண்டு காவிரி பாசனப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, தூர்வாரும் பணிகள் குறித்த குறும்படத்தை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பழனிமாணிக்கம், ராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர் ஜவாஹிருல்லா, நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோயில் மாட வீதியைச் சுற்றி சிமெண்ட் சாலை அமைக்கும் பணி!

## அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

திருவண்ணாமலை, ஜுன் 11-

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் திருக்கோயில் மாடவீதியைச் சுற்றி சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை பொதுப்பணி துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் நேரில் சென்று ஆய்வு செய்து செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்ததாவது:

நெடுஞ்சாலைத்துறை மூலமாக சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2021-22-ன் கீழ் அருணாச்சலேஸ்வரர் திருக்கோவில் மாடவீதி சுற்றி சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்காக பேகோபுரத்தெரு சந்திப்பு (திரௌபதி அம்மன் கோவில்) முதல் காந்தி சிலை வரையில்; சிமெண்ட் சாலை பணி அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆந்திர மாநிலம் திருப்பதி திருமலையில் சாலைகள் எல்லாம் சிமெண்ட் சாலையாக அமைக்கப்பட்டுள்ளதை போல் தேர்தல் வாக்குறுதியின் போது திருவண்ணா மலை தேரடி வீதியைச் சுற்றி சிமெண்ட் சாலைகள் அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அதை கருத்தில் கொண்டு ஆட்சிக்கு வந்தவுடன் திருவண்ணாமலை தேரடி வீதியில் கான்கிரீட் சாலை அமைப்பதற்காக ரூ.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணைப்பிறப்பித்தார் மற்றும் பணிகள் தொடரும் போது தளத்தில் உள்ள பிரச்சினைகளான மின் இணைப்புகள் ஏற்கனவே பைப்லைன் மூலமாக கம்பிகள் இணைக்கப்பட்டுள்ளது. அடிதளத்தில் மின்சாரம் இணைக்க வேண்டும் என்ற அடிப்படையில் மின்சார துறையின் சார்பாக ரூ.5 கோடி மதிப்பில் கேபிள்கள் வாங்கப்பட்டுள்ளது.

மேலும் நகராட்சி பகுதியாக இருப்பதால் நகராட்சி இல்லங்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் வசதிக்காக நகராட்சி துறையின் சார்பாக ரூ.3.45 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான பைப்புகள் வாங்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த கான்கிரீட் சாலை அமைக்க வேண்டும் என்றால் நெடுஞ்சாலை துறை, மின்சாரத் துறை, நகராட்சி துறை ஆகிய மூன்றும் துறைகளும் இணைந்து பணியாற்றினால் தான் இந்த பணிகளை கார்த்திகை மாதம் தீப விழாவிற்குள் பணிகளை விரைந்து முடிக்கப்பட முடியும் என அறிவுறுத்தினார்.

இதனைத்தொடர்ந்து அருணாச்சலேஸ்வரர் திருக்கோவில் அறங்காவலர் என்பது அரசின் நடவடிக்கை பெயரில் மனுக்கள் பெறப்பட்டுள்ளது. காவல் துறை, வருவாய் துறை மூலமாக சான்றுகள் பெறப்பட்டு தகுதியானவர்களை இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் மூலம் அறங்காவலர் நியமனம் செய்யப்படும் என பொதுப்பணித்துறை அமைச்சர் செய்தியாளர் சந்திப்பின் போது தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சட்டப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் பா.முருகேஷ், சட்டமன்ற உறுப்பினர் (ரிஷிவந்தியம்) வசந்தம் கார்த்திகேயன், மாநில தடகள சங்க துணை தலைவர் மரு.எ.வ.வே.கம்பன், மாநில கைப்பந்து சங்க துணை தலைவர் ஸ்ரீதரன், நெடுஞ்சாலைத் துறை கண்காணிப்பு பொறியாளர் பழனிவேல், கோட்டப் பொறியாளர் கே.எஸ். ராஜ்குமார், உதவி கோட்டப் பொறியாளர் ரகுராம், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் திருமதி. ஆர்.மந்தாகினி, திருவண்ணாமலை நகராட்சி ஆணையர் தட்சணாமூர்த்தி, அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோவில் இணை ஆணையர் மற்றும் செயல் அலுவலர் திருமதி.ஜோதி, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவியை திரும்பப் பெறுக!

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்!

சென்னை, ஜுன் 11 -

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கூட்டம் 2023 ஜுன் 6, 7 ஆகிய தேதிகளில் சென்னையில் மத்தியக்குழு உறுப்பினர் பெ.சண்முகம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர்கள் பிரகாஷ் காரத், ஜி.ராமகிருஷ்ணன், மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், மத்தியக்குழு உறுப்பினர்கள் பி. சம்பத், உ. வாசுகி மற்றும் மாநில செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:-

தமிழ்நாடு ஆளுநர் ஆர். என்.ரவி தொடர்ந்து ஆளுநருக்குரிய அதிகார வரம்புகளை மீறி செயல்படுவதை வழக்கமாக கொண்டுள்ளார். மாநில அமைச்சரவையின் ஆலோசனைகளை ஏற்றுத்தான் ஆளுநர் செயல்பட முடியும் என்று உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்திய பிறகும் அவர் தனது போக்கை மாற்றிக் கொள்ளவில்லை.

தமிழ்நாடு அரசின் ஒப்புதல் இல்லாமலேயே சமீபத்தில் பல்கலைக்கழக துணை வேந்தர்கள் மாநாட்டை, வேந்தர் என்ற முறையில், ஆளுநர் நடத்தியுள்ளார். மாநில பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். ஆனால், தமிழ்நாடு அரசின் சார்பில் பங்கேற்க வேண்டிய உயர்கல்வித் துறை அமைச்சர் அழைக்கப்படவில்லை. இம்மாநாட்டில் பேசிய ஆளுநர், தமிழக முதலமைச்சர் அண்மையில் வெளிநாடுகளுக்குச் சென்று வந்தார். நாம் கேட்பதாலோ, அவர்களுடன் பேசுவதாலோ முதலீட்டாளர்கள் வரமாட்டார்கள் என்றும், அதற்கான கட்டுமான வசதிகள் தமிழ்நாட்டில் இல்லை எனவும் பேசியுள்ளார். ஆளுநரின் இந்த பேச்சு உண்மைக்கு புறம்பானது மட்டுமல்ல, தமிழ்நாட்டிற்கே விரோதமானதாகும். தமிழ்நாட்டில் மூலதனமிட தயாராக உள்ள வெளிநாட்டு முதலீட்டாளர்களை தடுக்கும் வகையில் ஆளுநரின் பேச்சு அமைந்துள்ளது. மேலும், அனைவருக்கும் கல்வி என்கிற கோட்பாட்டைப் பின்னுக்குத் தள்ளுகிற ஒன்றிய அரசின் தேசியக் கல்விக் கொள்கை அவசியமானது எனவும் ஆளுநர் பேசியுள்ளார்.

மேலும், மற்றொரு கூட்டத்தில் மொழிவழி மாநில கருத்தாக்கத்தை விமர்சித்துள்ளார். ஒரு மாநிலத்திற்கென்று தனி பண்பாடு, கலாச்சாரம் இல்லை, தமிழர், தெலுங்கர் என்பது கற்பனையான அடையாளம் என்று பேசியதன் மூலம் தேசிய இன அடையாளத்தையே நிராகரித்துள்ளார். மாநிலங்களின் ஒன்றியமே பாரதம் என்ற அரசியல் சாசனத்திற்கு மாறாக, இந்த அடையாளங்கள் தேசத்தை பலவீனப்படுத்துவதாக குறிப்பிட்டுள்ளார். அரசியல் சாசன அடிப்படையில் உருவாக்கப்பட்ட பதவியில் இருந்து கொண்டு அதற்கு புறம்பாகவே பேசுவது முற்றிலும் அநியாயமானது. ஆளுநரின் இத்தகைய கருத்துக்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு வன்மையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது. அரசியல் சாசனத்திற்கு விரோதமாகவும், ஆர்.எஸ்.எஸ்.சின் அரசியல் கருவியாகவும் செயல்பட்டு வரும் தமிழ்நாடு ஆளுநரை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டுமெனவும், இவரை ஆளுநர் பொறுப்பிலிருந்து பதவி நீக்கம் செய்வதற்கான உரிய நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயற்குழு வலியுறுத்துகிறது.